கடவுள்துணை.

ஔவையாரருளிச்செய்த

# நல்வழிப்பதவுரை.

ச-ம் பதிப்பு.

THOMBOO CHETTY ST. MADRAS
... டாக்டர்
உ. வே. சா... ...யர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

இஃது,
ஊ. புஷ்பரதசெட்டியார் கம்பினியாரால்
கலாரத்நாகரம்
என்னும் தமது அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
சென்னை:

1891.

கடவுள் துணை.

# ஔவையார் சரித்திரச் சுருக்கம்.

---

பாண்டியர்கள் அரசாட்சி செய்துவந்த மதுரையில் கடைச்சங்க மிருந்தகாலத்திலே சோழ தேசத்திலே உறையூரென்னும் ஊரிலே ஓர் சாவடியின்கண்ணே ஔவையார் ஆதியென்பவளுக்கும் பகவனென்பவருக்கும் சிரேஷ்டபுத்திரியாராகப் பிறந்தனர். அத் தாய்தந்தையர்களுக்குள் ஏற்பட்டிருந்த உறுதி மொழிப்படி பிறந்த குழந்தையைத் தாய்விட்டு நீங்க மனம் பொறுமல் வருந்தியபோது சொல்லிய

வெண்பா.

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ - முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்றோய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

அதுகேட்டுத் தாய் போயினள்.

பின்பு அக்குழந்தையை அச் சேரியி லிருந்த பாணர்கள் எடுத்து வளர்க்க வளர்ந்து, அவர்

இயல்பாகவே சகல கலைகளும் கற்றுணர்ந்து, தமிழ்நாட்டில் கல்வியிற் சிறந்த பெண்களுள் முதன்மைபெற் றிருந்தனர்.

ஔவையாரால் செய்யப்பட்ட நூல்களாவன— விநாயகரகவல், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, கல்வியொழுக்கம், அசதிக்கோவை, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்து, ஞானக்குறள், பந்தனந்தாதி முதலியனவாம்.

மேற்சொல்லிய நீதி நூல்களில் அகரவருக்கம் ஆதியாகச் சொல்லப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும் நூல்கள் சொல்நடையும், பொருட் பொலிவும், வாக்கியச் சுருக்கமும் பொருந்தியவைகளா யிருக்கின்றமையால், பிறதேயத்தாராலும் தங்கள் தங்கள் பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டுச் சிறப்படைந்திருக்கின்றன.

ஔவையார் தம்முடைய சகோதரராகிய திருவள்ளுவ நாயனரினும் புத்தி நுட்பமுள்ளவர்; நான்குவித புருஷார்த்தங்களில் திருவள்ளுவ நாயனர் தர்மார்த்த காமம் என்னு மூன்றையும் கஙஙo - குறள் வெண்பாக்களினுல் சொல்லியதைக் கேட்டருளி, மோக்ஷத்தையுஞ் சேர்த்துப் புருஷார்த்த நான்கையும் ஓர் வெண்பாவால் மொழிந்தருளினர்:—

வெண்பா.

தலறம் நீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமைத் - தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

ஔவையார் காலத்து ஒட்டக்கூத்தர், புக ழேந்தி, கம்பர் முதலிய தமிழ்வித்துவான்கள் இருந்தனரென்று தெரியவருகிறது.

ஔவையார் கிருகஸ்தாசிரமஞ் சிறந்ததென் று மற்றவர்களுக்குப் போதித்து வந்ததேயன்றி, தாம் சரீராந்தம் வரையினும் விவாகமின்றியிருந் தனர். இவர் உச0 - வருஷங்களுக்கு அதிக மாகச் சீவித் திருந்ததாகச் சொல்லுகின்றனர். ஆகையால், அவருக்கு இயற்பெயர் மறைந்து முதியவ ளென்னும்பொருள் தருகிற ஔவையா ரென்னும் சிறப்புப்பெயர் வழங்கி வருகின்றது.

இப்படி இருக்குங் காலத்தில் ஔவையார் ஒவ்வோர் காரியத்தின்பொருட்டுத் தனித்தனி யாகக் கவிகள் பாடி அநேக அற்புதங்கள் செய் துவரும் நாளில் ஒருநாள் விநாயகக்கடவுளை விரைவாகப் பூசைசெய்ய, அக்கடவுள் "வழக் கப்படியன்றி விரைந்து பூசைசெய்வது என்" என்று வினவ, "சுவாமி சுந்தரமூர்த்தி நாய

ரும் சேரமான் பெருமாள் நாயனாரும் கைலா சத்திற்குச் செல்கின்றனர்; என்னையும் அழைத்தார்கள்" என, "அவர்கள் அங்குச் சேர்வதற்கு முன் உன்னைச் சேர்ப்பிப்போம், நீ கிரமப்படி பூசை செய்" என்று திருவாய்மலர்ந் தருளினர். அங்ஙனமே தாம் பூசைசெய்து முடித்தனர். உடனே விநாயகக்கடவுள் தமது துதிக்கையால் எடுத்துவிடக் கைலாயத் தடைந்தனர். பின்பு வந்துசேர்ந்த அவ்விருவரும் ஔவையாரைக் கண்டு அதிசயப் பட்டார்கள். அச்சமயத்தில் இக்கவி ஔவையாரால் சொல்லப்பட்டதாக வழங்குகின்றது.

கட்டளைக் கலித்துறை.

மதுர மொழிநல் லுமையாள் புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினையவல் லார்க்குமுன் னோடுமுகில் போல்முழங்கி
அதிர நடந்திடும் யானையுந் தேரு மதன்பின்வருங்
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே.

ஔவையார் சரித்திரச் சுருக்கம்

முற்றிற்று.

கடவுள் துணை.

# நல்வழிப்பதவுரை.

## நான்முகம்.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை,
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன் - கோலஞ்
செய், துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெ
னக்குச், சங்கத் தமிழ்மூன்றுந் தா.

| | |
|---|---|
| கோலஞ் செய் | அழகு செய்கின்ற |
| துங்கம் | உயர்வாகிய |
| கரி முகத்து | யானை முகத்தையுடைய |
| தூ மணியே | பரிசுத்தமணிக் கொப்பாகிய விநாயகமூர்த்தியே |
| உனக்கு | உமக்கு |
| நான் | யான் |
| பாலும் | பாலும் |
| தெளி தேனும் | தெளிந்த தேனும் |
| பாகும் | வெல்லப்பாகும் |
| பருப்பும் | பருப்பும் |
| இவை நாலும் | (ஆகிய) இந் நான்கையும் |
| கலந்து தருவேன் | கலந்து நிவேதிப்பேன் |
| நீ எனக்கு | நீா அடியேனுக்கு |
| சங்கம் | (புலவர்) கூட்டத்தில் (வழங்கும்) |
| தமிழ் மூன்றும் தா | முத்தமிழையும் தந்தருளும். |

(இதன்கருத்து.) விநாயகனைப் பூசிக்கின் முத்தமிழ்ப் புலமையும் உண்டாகும்.

உம்மைகள் ஐந்தில் முதலில் உள்ள நான்கும் எண்ணுப்பொருள; மற்றைய தொன்றும் முற்றுப்பொருளது. மணி - உவமை ஆகுபெயர். குவ்வுருபு இரண்டும் கொடைப்பொருள.

---

## நூல்.

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை, மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால், ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லும், தீதொழிய நன்மை செயல்.

| | |
|---|---|
| புண்ணியம் ஆம் | புண்ணியமானது செய்தற்குரியது |
| பாவம் போம் | பாவமானது செய்தற் குரியது அன்று |
| போன நாள் | முற்பிறப்பில் |
| செய்த அவை | செய்த அவ்விருவினைகளே |
| மண்ணில் பிறந்தார்க்கு | பூமியில் பிறந்த மனிதர்களுக்கு |
| வைத்த பொருள் | (அனுபவிக்க) வைத்த பொருளாகும் |
| எண்ணுங்கால் | ஆலோசிக்குமிடத்து |
| எச்சமயத்தோர் சொல்லும் | எந்தச் சமயத்தார் சொல்லுதலும் |
| ஈது ஒழிய | இதை அல்லாமல் |

| | |
|---|---|
| வேறு இல்லை | மற்றொன்றில்லை (ஆகையால்) |
| தீது ஒழிய | பாவம் நீங்க |
| நன்மை செயல் | புண்ணியத்தைச் செய்யுங்கள். |

(இ - து.) பாவம் நீங்கலாகப் புண்ணியஞ் செயல் வேண்டும்.

தோ-எ-ய்—நீங்கள்; ப-லை—செயல்; செ-ள்—நன்மை.

---

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்
கால், நீதி வழுவா நெறிமுறையின் - மேதினி
யில், இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்
தோர், பட்டாங்கி லுள்ள படி.

| | |
|---|---|
| சாற்றுங்கால் | சொல்லுமிடத்து |
| மேதினியில் | பூமியில் |
| சாதி இரண்டு ஒழிய | இரண்டு சாதி தவிர |
| வேறு இல்லை | வேறே இல்லை (அவை) |
| நீதி வழுவா | நீதி தவறாத |
| நெறி முறையில் | வழியினது முறைமையால் |
| இட்டார் பெரியோர் | (இரப்போர்க்கு) கொடுத்தவர் உயர்வாகிய சாதியார் |
| இடாதார் இழிகுலத்தோர் | கொடாதவர் இழிவாகிய சாதியார் (என்பவையாம் இது) |
| பட்டாங்கில் | உண்மையாகிய நூலில் |
| உள்ளபடி | இருக்கின்ற விதமாம். |

(இ - து.) நன்மார்க்கத்தி னின்று இரப்போர்க்குக் கொடுப்பவரோ உயர்ந்த குலத்தார்.

எ-ய்—வேறு, இட்டார், இடாதார்; தோ-எ-ய்—இது; ப-லை—இல்லை, பெரியோர், இழிகுலத்தோர், உள்ள படி. சாற்றுங்கால்—இதை ஒரு மொழியாகக் கொண்டால் செயினென்னும் வாய்ப்பாட் டெதிர்கால வினை எச்சமாகவும், தொடர்மொழியாகக் கொள்ளின் பெயரொச்சத்தொகா நிலைத் தொடராகவும் கொள்க; சாற்று - பகுதி, உம் - சாரியை, கால் - எதிர்கால வினையெச்ச விகுதி, பகுதி யீற்று உகரக்கேடும், சாரியை யீற்று மகரத் திரிபும் சந்தி. (உ)

---

இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே,
இடும்பொய்யை மெய்யென் றிராதே - இடுங்
கடுக, உண்டாயி னுண்டாகு மூழிற் பெருவலி
நோய், விண்டாரைக் கொண்டாடும் வீடு.

| | |
|---|---|
| இடும்பைக்கு | துன்பங்களாகிய (சரக்குகளுக்கு) |
| இடும் பை இயல் உடம்பு | நிறைத்துவைக்கும் பையை ஒத்த தன்மையை யுடைய தேகம் |
| இது அன்றே | இதல்லவா |
| இடும் | உணவை (இடுகிற) |
| பொய்யை மெய் என்று இராது | நிலையில்லாததை நிலையுடையதென்று நம்பியிராமல் |
| கடுக இடும் | விரைவாக (இரப்பவர்க்கு) கொடுங்கள் |
| உண்டாயின் | (இத்தருமம் உங்களிடத்து) உண்டானால் |
| ஊழின் | முறையினால் |

| | |
|---|---|
| பெரு வலி நோய் | மிகுந்த வலிமையை யுடைய மல நோயை |
| விண்டாரை கொண்டாரும் | நீங்கினவரை மெய்ச்சிக் கொள்ளுகிற |
| வீடு உண்டாகும் | முத்தி (உங்களுக்கு) சித்திக்கும். |

(இ-து.) அறஞ்செய்யின் முத்தி சித்திக்கும்.

தோ-எ-ய்—நீங்கள், எ-ய்—வீடு; ப-லை—இடும், உண்டாகும். (ங)

---

எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது, புண்ணியம் வந்தெய்து போதல்லால்—கண்ணில்லான், மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே, ஆங்கால மாகு மவர்க்கு.

| | |
|---|---|
| யார்க்கும் | எவர்களுக்கும் |
| புண்ணியம் வந்து | புண்ணியம் வந்து |
| எய்து போது அல்லால் | கூடிய காலத்தி லல்லாமல் |
| எண்ணி | நினைந்து |
| ஒரு கருமம் | ஒரு தொழிலை |
| செய்யொண்ணாது | செய்யமுடியாது |

[மற்றைக்காலத்தில் செய்யுமுயற்சியானது]

| | |
|---|---|
| கண் இல்லான் | குருடன் |
| மாங்காய்விழஎறிந்த | மாங்காய் விழும்படி வீசிய |
| மாத்திரை கோல் ஒக்கும் | அளவுகோலை ஒத்திருக்கும் |

மகாமகோபாத்யாய, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம் ... 20.

| | |
|---|---|
| ஆம்காலம் | (புண்ணியம்) வந்துகூடியபோது |
| அவர்க்கு ஆகும் | அவர்களுக்கு (அத்தொழில் தானே) முடியும். |

(இ-து.) அறம் கைகூடாத காலத்தில் செய்யுங் காரிய முயற்சி கைகூடாது.

தோ-எ-ய்—தொழில், முயற்சி, அத்தொழில்; ப-லை— ஒன்றுது, ஒக்கும், ஆகும்; செ-ள்—கோல். உம்மை உயர்வு சிறப்போடு முற்றுப்பொருளது. செய்—செய்ய என்னும் வினை எச்சத்தின் விகுதி அகரம் தொக்கது. எய்துபோது — வினைத்தொகை நிலைத்தொடர். ஆங்காலம் — ஆகும் என்னும் பெயரொச்சத்தின் உயிர்மெய் கெட்டது. ஏ - ஈற்றசை. (௪)

---

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா, பொ
ருந்துவன போமினென்றுற் போகா - இருந்
தேங்கி, நெஞ்சம்புண் ணுக நெடுந்தூரந் தா
நினைந்து, துஞ்சுவதே மாந்தர் தொழில்.

| | |
|---|---|
| வருந்தி அழைத்தாலும் | வருத்தப்பட்டு அழைத்தாலும் |
| வாராத வாரா | வாராதவைகள் வாராவாம் |
| பொருந்துவன | வருபவைகள் |
| போமின் என்றுல் போகா | நீங்குமினென்று கேட்டுக்கொள்ளினும் போகாவாம் |
| இருந்து ஏங்கி | (இவ்வுண்மை யறியாமல்) இருந்து ஏக்கமுற்று |
| நெஞ்சம் புண் ஆக | மனம் புண்ணுகும்படி |

| | |
|---|---|
| நெடும் தூரம் | நெடிய தூரத்தில் |
| தாம் நினைந்து | தாங்கள் எண்ணமிட்டு |
| துஞ்சுவதே | உறங்குவதே |
| மாந்தர் தொழில் | மனிதரது தொழிலாகும். |

(இ-து.) செய்தமுறைப்படி நல்வினை தீவினைப் பலன்கள் வரும்; ஆதலின், தீவினைப் பயனாகிய துன்பத்திற்குக் கவலைப்படலாகாது.

எ-ய்—வாராத, பொருந்துவன, துஞ்சுவது; ப-லை—வாரா, போகா, தொழில். உம்மை—உயர்வு சிறப்பு. வாராத—எதிர்மறை வினையா லணையும்பெயர். பொருந்துவன—உடன்பாட்டு வினையாலணையும்பெயர். ஏ - தேற்றம். மாந்தர் என்பது எப்போதும் பன்மை ஆதலால் ஒருமையில் வாராது. (ரு)

---

உள்ள தொழிய வொருவர்க் கொருவர் சுகம்
கொள்ளக் கிடையாக் குவலயத்தில் - வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னாலென்
உடலோடு வாழு முயிர்க்கு.

| | |
|---|---|
| உள்ளது ஒழிய | (ஊழினால்) உள்ளது தவிர |
| ஒருவர்க்கு | ஒருவருக்கு |
| ஒருவர் சுகம் | மற்றொருவருடைய இன்பம் |
| கொள்ள கிடையா | அனுபவிக்கக் கிடையாத |
| குவலயத்தில் | பூமியில் |
| உடலோடு வாழும் உயிர்க்கு | உடலோடு (கூடி) வாழுகிற உயிர்களுக்கு |
| வெள்ளம் கடல் | வெள்ளநீரையுடைய கடலிலே |

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

| | |
|---|---|
| ஓடி | (கப்பலின்மேல்) சென்று |
| மீண்டு | திரும்பி |
| கரையேறினல் என் | கரையேறினலும் (பயன்) யாது. |

(இ-து.) பெருமுயற்சியாற் பெரும்பொருள் சம்பாதித்தாலும் ஊழின் அளவுக் கதிகமாக அநுபவித்தல் கூடாது.

தோ - எ-ய்—பயன்; ப-லே—என். உள்ளது—உடன்பாட்டுக் குறிப்பு வினையாலணையும் பெயர; உள் - பகுதி, து - ஒன்றன்பாற் படாக்கை விகுதி, அ - சாரியை, ள் - சந்தி. கிடையாக்குவலயம் — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத் தொகாநிலைத் தொடர. என் — என்னென்னும் வினவினைக் குறிப்பின் மரூஉ. (சு)

---

எல்லாப் படியாலு மெண்ணினு லிவ்வுடம்பு,
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை - நல்
லார், அறிந்திருப்பா ராதலினு லாங்கமல நீர்
போல், பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.

| | |
|---|---|
| எல்லாப்படியாலும் | சகலவிதங்களினுலும் |
| எண்ணினுல் | ஆலோசித்தால் |
| இவ் வுடம்பு | இந்தத் தேகம் |
| பொல்லா புழு | பொல்லாத புழுக்களுக்கும் |
| மலி நோய் | மிகுந்தவியாதிகளுக்கும் |
| புல் குரம்பை | அற்பமாகிய சிறுவீடாக (இருக்கின்றது) |
| நல்லாா அறிந்திருப்பார் | நல்லறிவினோர் (இவ்வுடம்பினிழிவை) அறிந்திருப்பாாகள் |
| ஆதலினுல் | ஆகையால் |

கமல நீர்போல் — தாமரையிலையில் நீர்போல
பிறிந்து இருப்பார் — (இவ்வுடம்பில்) கூடியும் கூடாம லிருப்பார்கள்
பிறர்க்கு பேசார் — மற்றவருக்குச் சொல்லார்

(இ-து.) உடம்பின் இழிவை அறிந்த ஞானிகள் அதிற் பற்றற் றிருப்பர்.

எ-ய்—உடம்பு, நல்லார்; ப-லை—குரம்பை, பிறிந்திருப் பார், பேசார. உம்மை - முற்று. ஆம் - அசை. கமலம்— முதலாகுபெயர். (எ)

---

ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்த வா யினுமூழ், கூட்டும் படியன்றிக் கூடாவாம்—தேட் டம், மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின், தரியாது காணும் தனம்.

மகிதலத்தீர் — பெரிதாகிய பூமியிலிருப்பவர்களே!
கேண்மின் — கேளுங்கள்
ஈட்டும் பொருள் முயற்சி — தேடுதற்குரிய பொருளுக்காகச்(செய்கின்ற) பிரயத்தினங்கள்
எண் இறந்த ஆயினும்—அளவில்லாதன ஆயினும்
ஊழ் கூட்டும்படி அன்றி — (முன்செய்த) வினையானது கூட்டும் அளவில் அல்லாமல்
கூடா — (அப்பொருள்) சேரா
தேட்டம் — தேடத்தகுவது
மரியாதை — மரியாதையேயாம்
தனம் தரியாது — அப்பொருள் நிலைபெறாது.

(இ - ள்.) ஒருவன் நிலைபெறுப்பொருளைத் தேடுவதி னும் நிலைபெறுவதாகிய மரியாதையையே தேடல் வேண் டும்.

தோ - எ - ய்—பொருள், எ - ய்—தேட்டம், தனம்; ப-லை—கூடா, மரியாதை, தரியாது. உம்மை — உயர்வு சிறப்பு. கூட்டும்படி — பெயரெச்சத் தொகாநிலைத் தொ டர். படி என்னும் இடைச்சொல் ஈண்டுப் பெயர்த்தன் மைப்பட்டு நின்றது. ஆம்—அசைச்சொல். காணும் இர ண்டும் முன்னிலை அசைச்சொற்கள். (அ)

---

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து.

| | |
|---|---|
| ஆற்றுபெருக்கு அற்று | ஆற்றினீர்ப்பெருக்குவற்றி |
| அடி சுடும் | பாதங்களைச் சுடுகின்ற |
| அந்நாளும் | அக்காலத்திலும் |
| அ ஆறு | அந்த ஆறுனது |
| ஊற்றுப்பெருக்கால் | ஊற்றுநீர்ப்பெருக்கினுல் |
| உலகு ஊட்டும் | உலகத்தாரை உண்பிக்கும் (அது போல) |
| நல்லகுடிப்பிறந்தார் | நற்குடியிற்பிறந்தவர் |
| நல்கூர்ந்தார் ஆனுலும் | தரித்திரரானுலும் |
| ஏற்றவர்க்கு | தம்மிடத்துவந்து இரப்பவர்க்கு |
| இசைந்து | (கருத்து) இசைந்து |
| இல்லை என மாட்டார் | இல்லையென்று சொல்லார். |

(இ-து.) உயர்ந்த குடியிற்பிறந்தோர் வறுமைக்காலத்தும் ஈவர்.

எ - ய்—குடிப்பிறந்தார்; ப - லை—இல்லையென மாட்டார். ஆற்றுப்பெருக்கு—ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர், தொழிற்பண்புத் தற்கிழமைப்பொருள். நல்லகுடி—குறிப்புப் பெயரொச்சத் தொகாநிலைத் தொடர். ஏற்றவர்—இறந்தகால வினையாலணையும் பெயர். ஏல் - பகுதி, அர் - விகுதி, ற் - இடைநிலை, அகரம் - சாரியை, லகரத்திரிபும் வகரத்தோற்றமும் சந்தி. பெருக்கு—முதனிலைதிரிந்த தொழிலாகுபெயர். உலகு—இடவாகுபெயர். உம் இரண்டும் உயர்வுசிறப்பு. (௯)

---

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.

| | |
|---|---|
| மாநிலத்தீர் | பெரிய பூமியிலுள்ளவர்களே |
| ஆண்டு ஆண்டுதோறும் | (இறந்த) அவ்விடத்தில் வருடந்தோறும் |
| அழுது புரண்டாலும்-புரண்டழுதாலும் | |
| மாண்டார் வருவரோ | இறந்தவர் திரும்பி வருவாரோ (வாரார் ஆகையால்) |
| வேண்டா | (அவ்வழுகை) வேண்டுவதில்லை |
| நமக்கும் அதுவழியே | நமக்கும் அம்மரணமே வழியாகும் |
| நாம் போம் அளவும்-யாம் இறக்குமளவும் | |

எமக்கு என் என்று நமக்கு யாது சம்பந்தமென்று
இட்டு உண்டுஇரும் { (பிச்சை) இட்டுப் புசித்து (கவலை தீர்ந்து) இருங்கள்.

(இ-து) இறந்தவாபொருட்டு அழுகையால் வருத்தமே அன்றிச், சிறிதும் பயனின்மையால், ஐயமிட்டு உண்டு கவலையற் றிருக்கவேண்டும்.

எ-ய்—மாண்டார்; தோ-எ-ய்—அழுகை, நீர்; ப-லை—வருவரோ, வேண்டா, இரும். (கo)

---

ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய்
இருநாளைக் கேலென்றா லேலாய் - ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்த லரிது.

இடும்பைகூர் என் வயிறே } துன்ப மிகுதற்கு ஏதுவாகிய என்னுடைய வயிறே
ஒருநாள் உணவை ஒருநாளினது உண்டியை
ஒழி என்றால் ஒழியாய் } விட்டிரு வென்றால் விட்டிராய்
இரு நாளைக்கு { (கிடைத்தபோது உணவை) இரண்டு நாட்களுக்கு
ஏல் என்றால் ஏலாய் { ஏற்றுக்கொள் ளென்றால் ஏற்றுக் கொள்ளாய்
என் நோ { (அவ்வுண்டிக்காக) யான் படும் வருத்தத்தை
ஒருநாளும் அறியாய் { ஒருநாளாயினும் தெரிந்திலாய் (ஆகையால்)

| | |
|---|---|
| உன்னோடு வாழ்தல் அரிது | உன்னுடன் கூடி வாழ்தல் அருமையா யிருக்கின்றது. |

(இ-ஜ.) வயிற்றுக்குத் திருப்திசெய்தலினும் அரியது பிறிதில்லை.

தோ - எ - ய் — நீ; எ - ய் — வாழ்தல்; ப - லை— ஒழியாய், ஏலாய், அறியாய், அரிது; செ-ள்—உணவை, நோ. கூர் என் வயிறு — வினைத்தொகை நிலைத்தொடர், வயிறு என்னும் பெயர்கொண்டது. என்னோ—தொழிற பண்புத்தற்கிழமைப்பொருளில்வந்த ஆறாம்வேற்றுமைத் தொகை நிலைத்தொடர். உணவு— தொழிலாகுபெயர். நாளும் என்பதில் உம்மை முற்றுப்பொருளில் வந்தது. நோ—முதனிலைத் தொழிற் பெயர். (கக)

---

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே-ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

| | |
|---|---|
| ஆற்றங்கரையில் | ஆற்றங்கரையிலிருக்கின்ற |
| மரமும் | விருக்ஷங்களும் |
| அரசு அறிய | அரசன் தெரிந்துகொள்ள |
| வீற்றிருந்த வாழ்வும் | பெருமையாயிருந்த வாழ்க்கையும் |
| விழும் அன்றே | அழியும் அல்லவா (ஆதலினால்) |
| உழுது உண்டு வாழ்வு | உழுது பயிர்செய்து புசித்து வாழ்வதே |
| ஏற்றம் | உயர்வினதாகும் |
| அதற்கு | அவ்வாழ்க்கைக்கு |

| | |
|---|---|
| ஒப்பு இல்லை | சமானமில்லை |
| வேறு ஓர்பணிக்கு பழுது உண்டு | மற்றைத் தொழில்களுக் கெல்லாம் அழிவுண்டு. |

(இ-து.) உழுது பயிர்செய்யும் எதேச்சையான சீவனமே சிறந்தது.

எ-ய்—வாழ்வு, ஒப்பு, பழுது; ப-லை—ஏற்றம், இல்லை, உண்டு. கண்டீர்—முன்னிலைப்பன்மை அசைச்சொல். ()

---

ஆவாரை யாரே யழிப்ப ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர் - ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல்.

| | |
|---|---|
| அம் புவியதன்மேல் | அழகிய பூமியில் |
| ஆவாரை அழிப்பர் யார் | வாழ்வாரை அழிக்க வல்லவர் யாவர் |
| அது அன்றி | அது வல்லாமல் |
| சாவாரை | இறப்பவரை |
| தவிர்ப்பவர் யார் | நிறுத்தவல்லவர் யாவர் |
| ஓவாமல் | ஒழியாமல் |
| ஐயம் புகுவாரை | பிச்சைக்குச் செல்வாரை |
| விலக்குவார் யார் | தடுக்கவல்லவர் யாவர் |
| மெய் | (இஃது) உண்மையாகும். |

(இ-து.) ஊழால் வரும் நன்மை தீமைகளைத் தவிர்க்க வல்லவர்கள் இல்லை.

எ-ய்—அழிப்பர், தவிர்ப்பவர், விலக்குவார்; ப-லை—யார். ஆவார், அழிப்பர், சாவார், தவிர்ப்பவர், புகுவார்,

யிலக்குவார்,— வினையாலணையும் பெயர்கள். அன்றி — எதிர்மறைக் குறிப்பு வினை எச்சம்; அல்-பகுதி, றி-விகுதி, லகரத் திரிபு சந்தி. ஓவாமல்—எதிர்மறைத் தெரிநிலைவினையெச்சம். ஓ - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, வகரம் சந்தி, எல்லாம் ஓர் பகுதி, மல் - விகுதி, ஏகாரம் மூன்றும் அசை. (கரு)

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை – சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியா
துயிர் விடுகை சால வுறும்.

| | |
|---|---|
| பிச்சைக்கு | பிச்சை யெடுப்பதினும் |
| மூத்த | பெரிய |
| குடிவாழ்க்கை | குடிவாழ்க்கையானது |
| பேசுங்கால் | சொல்லுமிடத்து |
| இச்சை பல சொல்லி- | பலவாகிய இச்சைகளைப் பேசி |
| இடித்து உண்கை | நெருக்கப்பட்டு உண்ணுதலாம் |
| சிச்சீ | சீசீ |
| வயிறுவளர்க்கைக்கு- | வயிற்றை வளர்த்தற்காக |
| மானம் அழியாது | பெருமை கெடாமல் |
| உயிர் விடுகை | உயிரை விடுதல் |
| சால உறும் | மிகுந்த பயனுளதாம். |

(இ - து.) இச்சகம்பேசிப் பெருமைகெடச் சீவனஞ் செய்வதினும் மரணமே மேலாகும்.

எ - ய்—வாழ்க்கை, விடுகை; ப - லை—உண்கை, சால வுறும். பிச்சைக்கு—உருபு மயக்கம். பேசுங்கால்—செயினென்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; பேசு -

பகுதி, கால் - விகுதி, உம் - சாரியை, பகுதியீற்று உகரக் கேடும், சாரியை யீற்று மகரத்திரிபும் சந்தி. இடித்து என்னும் செய்வினையெச்சம் செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தது. சிச்சீ—இகழ்ச்சிக் குறிப்புப் பொருளைத் தரும் இடைச்சொல். சால—உரிச்சொ லடியாகப்பிறந்த செயவென்னெச்சம். (கச)

---

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை - உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

| | |
|---|---|
| சிவாய நம என்று | சிவபெருமானுக்கு நமஸ்காரம்என்று |
| சிந்தித்து இருப் போர்க்கு | தியானஞ்செய்து இருப்பவர்களுக்கு |
| ஒரு நாளும் | ஒருபொழுதும் |
| அபாயம் இல்லை | துன்பம் இல்லை |
| உபாயம் இதுவே | (விதியை வெல்லுதற்கு) உபாயமாகிய இதுவே |
| மதியாகும் | உண்மையாகிய ஞானமாம் |
| அல்லாத | இஃதொழிந்த |
| எல்லாம் | மற்றச் செயல்களுக்கெல்லாம் |
| விதியே மதி ஆய்விடும் | (முன்செய்த) வினையே அறிவாய் விடும். |

(இ - து.) சிவத்தியானத்தால் அன்றி வேறொன்றால் விதியை வெல்ல லாகாது.

எ - ய்—அபாயம், இது, விதி; ப - லை—இல்லை, மதியாகும், மதியாய்விடும். உம்மை—முற்று. ஏ—இரண்டும் தேற்றம். (கரு)

தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கொ
டையால், கண்ணீர்மை மாறாக் கருணையால் -
பெண்ணீர்மை, கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்
த வையகத்துள், அற்புதமா மென்றே யறி.

| | |
|---|---|
| தண் நீர் | குளிர்ந்த சலமானது |
| நிலம் நலத்தால் | நிலத்தினது நன்மையாலும் |
| தக்கோர் குணம் | மேலோரது குணமானது |
| கொடையால் | ஈகையாலும் |
| கண் நீர்மை | கண்களின் குணமானது |
| மாறா கருணையால் | நீங்காத அருளாலும் |
| பெண் நீர்மை | பெண்களின் குணமானது |
| கற்பு அழியா ஆற்றால் | கற்புநிலைகெடாத விதத்தினாலும் |
| கடல் சூழ்ந்த | கடலாற் சூழப்பட்ட |
| வையகத்துள் | பூமியில் |
| அற்புதம் ஆம் என்று அறி | ஆச்சரியப்படத்தக்கவையாமென்று (நீ) அறிந்துகொள். |

(இ - து.) நிலத்தின் தன்மையால் நீருக்கும், கொடையால் நல்லோர்க்கும், அருளால் கண்களுக்கும், கற்பால் பெண்களுக்கும் சிறப்பு உண்டாம்.

தோ-எ-ய்—நீ, ப-லை—அறி. தக்கோர்—வினையாலணையும் பெயர்; தகு - பகுதி, ஆர் - விகுதி, பகுதி விகாரப்பட்டு இறந்தகாலம் காட்டுகின்றது, உகரக்கேடு சந்தி, ஈற்றயல் ஆ ஓ - ஆனது செய்யுள் வழக்கு. கடல்சூழ்ந்த என்பது எழுவாய்த் தொகாநிலைத்தொடருமாம். ஏ - அசை.
(௧௫)

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்
கால், எய்த வருமோ விருநிதியம் - வையத்,
தறும்பாவ மென்ன வறிந்தன் றிடார்க்கின்று,
வெறும்பானை பொங்குமோ மேல்.

| | |
|---|---|
| வையத்து | பூமியில் |
| பாவம் அறும் என்ன | பாவத்தை அறுங்களென்றுசொல்ல |
| அறிந்து | (அதை) அறிந்து |
| அன்று | அக்காலத்தில் |
| இடார்க்கு | (பிச்சை) இடாதவர்களுக்கு |
| செய்தீவினைஇருக்க | செய்த பாவம் இருக்க |
| இன்றுதெய்வத்தை | இப்போதுகடவுளை |
| நொந்தக்கால் | வெறுத்தால் |
| இரு நிதியம் எய்த | பெரிய திரவியம் அடைய |
| வருமோ | வராது |
| வெறும் பானை | வெறுமையாகிய பானை |
| மேல்பொங்குமோ | (அடுப்பில்வைத்து எரித்தால்) மேலே பொங்காது. |

(இ - து.) ஒருவர் தமக்குவந்த வறுமையைக்குறித்து இவ்வறுமைக்குக் காரணமான தீவினைசெய்த தம்மை வெறுக்காது தெய்வத்தை நோவதினால் பயனில்லை.

எ-ய்—நிதியம், வெறும்பானை; ப-லை—வருமோ, பொங்குமோ. செய்தீவினை—இறந்தகால வினைத்தொகை நிலைத்தொடர். நொந்தக்கால்—செயின் என்னும் வாய்பாட்டு எதிர்காலவினைஎச்சம்; நொ - பகுதி, கால் - காலங்காட்டும் வினைஎச்சவிகுதி, து அ-சாரியை, ந் க்-சந்தி. அறும்-ஏவற்பன்மை வினைமுற்று. ஓ—இரண்டும் எதிர்மறை. ()

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றா ருகந்தா ரெனவேண்டார் - மற்றோர்
இரணங் கொடுத்தா லிடுவ ரிடாரோ
சரணங் கொடுத்தாலுந் தாம்.

| | |
|---|---|
| பேர் உலகில் | பெரிய பூமியில் |
| பெற்றார் | பெற்றவர் |
| பிறந்தார் | உடன் பிறந்தவர் |
| பெரு நாட்டார் | பெரிய தேசத்தார் |
| உற்றார் | சுற்றத்தார் |
| உகந்தார் | சிநேகர் |
| என | என்று |
| வேண்டார் | விரும்பாதலோபிகள் |
| மற்றோர் | பிறர் |
| இரணம் கொடுத்தால் | (தம்முடம்பில்) காயத்தைச் செய்வாராகில் |
| இடுவர் | அவர்க்கு (எல்லாம்) கொடுப்பார்கள் |
| சரணம் கொடுத்தாலும் | (மேற்கூறிய பெற்றார் முதலாயினோர்) அடைக்கல மடைந்தாலும் |
| இடார் | கொடார். |

(இ-து.) உலோபிகள் தமக்குத் தீமைசெய்யுங் கள்வர் முதலோர்க்கன்றி நன்மைசெய்யுந் தாய்தந்தையர் முதலியோர்க்கு ஈயார்.

எ - ய்—வேண்டார்; ப - லை—இடுவர், இடார். மற்றோர் என்பதின் ஈற்றயல் ஆ ஓ ஆயிற்று. உம்மை-இழிவுசிறப்பு. ஓ-ஈற்றசை; தேற்றம் எனினும் அமையும். தாம் - அசை.()

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும், பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் - போவிப்பம், பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால், நாழி யரிசிக்கே நாம்.

| | |
|---|---|
| வயிற்றின் கொடுமையால் | வயிற்றினது (பசியாகிய) கொடுமையால் |
| நாழி அரிசிக்கு | ஒருபடி அரிசிக்காக |
| நாம் சேவித்தும் | நாம் சேவகஞ்செய்தும் |
| சென்று இரந்தும் | போய் யாசித்தும் |
| தெள் நீர் கடல் கடந்தும் | தெளிவாகிய நீரையுடைய கடலைக் கடந்தும் |
| பாவித்தும் | (ஒருவனைக் கனமாக) மதித்தும் |
| பார் ஆண்டும் | பூமியை அரசாட்சிசெய்தும் |
| பாட்டு இசைத்தும் | (செல்வர்மேற்) கவி பாடியும் |
| உடம்பை | இவ்வுடலை |
| பாழில் போவிப்பம் | வீணில் செலுத்துகிறோம். |

(இ-து.) உயிர்க் குறுதியாகிய முத்திநெறியிற் செலுத்தாது வீணில் இவ்வுடலைப் போக்கிக் காலங்கழிப்பது மிகவும் அறிவீனம்.

எ-ய்—நாம்; ப-லை—போவிப்பம்; செ-ள்—உடம்பை. உம்மைகள் ஆறும் எண்ணுப்பொருள. போவிப்பம்—தன்மைப்பன்மை எதிர்காலப் பிறவினைமுற்று; போ - பகுதி, வி - பிறவினை விகுதி, இரண்டுமோரா பகுதி, அம் - தன்மைப்பன்மை விகுதி, ப் - எதிர்கால இடைநிலை, ப் - சந்தி. குவ்வுருபு—பொருட்டுப் பொருளது. ஏ - தேற்றம்.

அம்பி துணையாக வாறிழிந்த வாறொக்கும்,
கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம் -
இம்மை, மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போ
க்கி, வெறுமைக்கு வித்தாய் விடும்.

| | |
|---|---|
| கொம்மை முலை பகாவார | இளமையாகிய தனங்களை விற்கின்ற வேசியரை |
| கொண்டாட்டம் | கொண்டாடுதல் |
| அமபி துணை ஆக | அம்பிக்கல்லானது துணையாக |
| ஆறு இழிந்த ஆறு ஒக்கும் | ஆற்றில் இறங்கிய விதத்தை ஒப்பாகும் (அன்றியும்) |
| மாநிதியம் போக்கி | பெரிய செல்வத்தை அழித்து |
| வெறுமைக்கு | தரித்திரத்துக்கு |
| வித்தாய்விடும் | காரணமும் ஆகும் (ஆகையால்) |
| இம்மைமறுமைக்கும் | இம்மைமறுமை இரண்டிற்கும் |
| நன்று அனறு | நல்லதாகாது. |

(இ-து.) வேசையருறவு இம்மை மறுமைப் பயன்களை இழப்பிக்கும்.

எ-ய்—கொண்டாட்டம்; ட-லை—ஒப்பும், நன்றன்று, வித்தாய்விடும்; செ-ள்—ஆறு. (உ0)

---

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் - ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்
தருஞ்சிவந்த தாமரையா டாள். [றும்

சிவந்த தாமரையாள்-செந்தாமரையில்வசிக்குந் திருமகள்
வஞ்சம் இலார்க்கு வஞ்சனையில்லாதவர்க்கு

| | |
|---|---|
| நீரும் | நீர்வளத்தையும் |
| நிழலும் | மனைவளத்தையும் |
| நிலம்பொதியும் நெற்கட்டும் | நிலத்தில் நிறையும் நெற்போரையும் |
| பேரும் | தோற்றத்தையும் |
| புகழும் | கீர்த்தியையும் |
| பெரு வாழ்வும் | பேரின்ப வாழ்வையும் |
| ஊரும் | கிராமத்தையும் |
| வரும் திருவும் | வளரும் செல்வத்தையும் |
| வாழ்நாளும் | ஆயுளையும் |
| என்றும் தரும் | எந்நாளிலும் தந்தருளுவாள். |

(இ-அ.) வஞ்சனையில்லாருக்குத் திருமகளருளால் எல்லாச் செல்வமும் உண்டாம்.

எ - ய்—தாமரையாள்; ப-லை—தரும்; செ - ள்—நீர் முதலியன.

உம்மைகள் பத்தில் முன்னைய ஒன்பதும் எண்ணுப் பொருள; பின்னையது ஒன்றும் முற்று. வாழ்நாள்—வினைத்தொகை நிலைத்தொடர். குவ்வுருபு கொடைப் பொருளது. தான் அசைச்சொல். (உக)

---

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து
வைத்துக், கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—
கூடுவிட்டிங், காவிதான் போயினபின் பாரே
யனுபவிப்பார், பாவிகா ளந்தப் பணம்.

| | |
|---|---|
| பணத்தை | திரவியத்தை |
| பாடுபட்டு தேடி | பிரயாசைப்பட்டுச் சம்பாதித்து |

| | |
|---|---|
| புதைத்துவைத்து | (பூமியில்) புதைத்துவைத்து |
| கெடுகெட்ட மானி டரோ கேளுங்கள் | அக்கேட்டினால் (இம்மை மறுமைப் பயன்களை) இழந்த மனிதரே கேளுங்கள் |
| இங்கு | இங்கே |
| கூடு விட்டு ஆவி போயினபின்பு | சரீரத்தைவிட்டு உயிர்போன பின்பு |
| பாவிகாள் | பாவிகளே |
| அந்தப்பணம் | அதத்திரவியத்தை |
| ஆர் அனுபவிப்பார் | யாவர் அநுபவிப்பார்கள். |

(இ - து.) பிரயாசப்பட்டுச் சம்பாதித்துப் பூமியிற் புதைத்துவைப்போரது பொருள் தமக்குப் பிறர்க்கும் பயன்படாதழியும்.

எ-ய்—ஆர் ; ப-லை - அனுபவிப்பார் ; செ-ள்—பணம்.

பாடு, கேடு,—இவ்விரண்டும் முதனிலைதிரிந்த தொழிற் பெயர். ஆர்—யாவரொன்பதின் மரூஉ. அந்த—அ - என் பதின் மரூஉ. ஏ—இரக்கப்பொருளில் வந்தது. தான் - அசை. போயின—செய்த என்னும் வாய்பாட்டு இறந்த காலப் பெயரொச்சம் ; போ - பகுதி, ய்-எழுத்துப்பேறு, இன் - இறந்தகால இடைநிலை, அ-பெயரொச்சவிகுதி. ()

---

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை.

| | |
|---|---|
| மன்று | நியாயத்தலத்தில் |
| ஓரம் சொன்னார் மனை | பக்ஷபாதஞ் சொன்னவருடைய வீட்டில் |
| வேதாளம் சேரும் | பேய்கள் சேரும் |
| வெள் எருக்கு பூக்கும் | வெள்ளெருக்கு மலரும் |
| பாதாள மூலி படரும் | பாதாளமூலியென்கிற கொடி படரும் |
| மூதேவி | மூதேவியானவள் |
| சென்று | போய் |
| இருந்து வாழ்வள் | நிலைபெற்று வாழ்வாள் |
| சேடன் குடிபுகும் | பாம்புகள் வாசஞ்செய்யும் |

(இ - ள்.) ஓரஞ்சொன்னவர் தங்கள் குடும்பத்தோடு அழிவர்.

எ - ய—வேதாளம், வெள்ளெருக்கு, பாதாளமூலி, மூதேவி, சேடன்; ப-லை—சேரும், பூக்கும், படரும், வாழ்வள், குடிபுகும். சென்று இருந்து என்னும் வினையெச்ச அடுக்கு வாழ்வள் என்னும் எதிர்கால வினைமுற்றுக்கொண்டது. ஏகாரம்-ஐந்தும் அசை. (உ௩)

---

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ் - மாறில்
உடப்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை.

| | |
|---|---|
| நீறு இல்லா நெற்றி பாழ் | திருநீறில்லாத நெற்றியானது பாழாகும் |

| | |
|---|---|
| நெய்இல்லா உண்டி | நெய்யில்லாத போசனம் |
| பாழ் | பாழாகும் |
| ஆறு இல்லா ஊருக்கு | நதியில்லாததேசத்துக்கு |
| அழகுபாழ் | அழகுபாழாகும் |
| மாறு இல் | மாறுபடாத |
| உடற்பிறப்பு இல்லா உடம்பு | சகோதரர் இல்லாத தேகம் |
| பாழ் | பாழாகும் (இவைபோல) |
| மடக்கொடி இல்லா மனை | இல்லறத்துக்குத் தக்க மனைவி இல்லாத வீடு |
| பாழே | பயனிலதே. |

(இ-ம்.) திருநீறு முதலியவற்றால் நெற்றிமுதலியன சிறப்படைதல்போல நற்குண நற்செய்கைகளை யுடைய இல்லாளால் மனையறஞ் சிறக்கும்.

எ-ய்—மனை; ப-லை—பாழ். பாழ் என்னும் உடன் பாட்டுப் பண்படி முற்றுப்பொருள்பட நின்றது. மடக் கொடி—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொ ழித்தொகை நிலைத்தொடர். ஏ—தேற்றம். (உ௬)

---

ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு.

| | |
|---|---|
| ஆனமுதலில் | தமக்குள்ள முதற்பொருளில் |
| அதிகம் செலவானால்- | மிகவும் செலவு செய்தவன் |
| மானம் அழிந்து | பெருமை கெட்டு |

| | |
|---|---|
| மதி கெட்டு | அறிவிழந்து |
| போனதிசை | ஓடிப்போன திசையிலும் |
| எல்லார்க்கும் | யாவர்க்கும் |
| கள்ளன் ஆய் | திருடனாகி |
| எழ் பிறப்பும் | எழுவகைப் பிறப்பிலும் |
| தீயன் ஆய் | தீமையை யுடையவனாகி |
| நல்லார்க்கும் | (தன்னிடத்தன்புள்ள) ஸ்திரீகளுக்கும் |
| பொல்லனும் | பொல்லாதவனுவான் |
| நாடு | ஆராய். |

(இ-து.) வருவாய்க்கு மிகுதியாகச் செலவுசெய்வோன் இம்மை மறுமைப் பயன்களை இழப்பன்.

எ-ய்—செலவாளன்; தோ - எ-ய்—நீ; ப-லே—பொல்லனும், நாடு. ஆன—இறந்தகாலப் பெயரெச்சம்; ஆ-பகுதி, இன் - இறந்தகால இடைநிலை, முதல்குறைந்தது, அ - பெயரெச்ச விகுதி. போன என்பதும் இப்படியே. உம்மை மூன்றில் முன்னையவிரண்டும் முற்று, பின்னையது ஒன்றும் இழிவுசிறப்பு. (௨௫)

---

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.

| | |
|---|---|
| பசி வந்திட | பசியானது வந்தால் |
| மானம் | கண்ணியமும் |
| குலம் | குலமும் |
| கல்வி | வித்தையும் |

| | |
|---|---|
| வண்மை | (இரப்போர்க்கு) கொடுத்தலும் |
| அறிவுடைமை | ஞானமுடைத்தாயிருத்தலும் |
| தானம் | (சற்பாத்திரத்தில்) தானஞ் செய்தலும் [கொடையும்] |
| தவம் | தவமும் |
| உயர்ச்சி | உயர்வும் |
| தாளாண்மை | முயற்சியும் |
| தேனின் | தேனினது |
| கசிவந்த சொல்லியர்மேல் | ஊற்றுப்போலத்தோன்றுகிற சொல்லையுடைய மாதர்மேல் |
| காமுறுதல் | ஆசைப்படுதலும் |
| பத்தும் | (ஆகிய) பத்தும் |
| பறந்துபோம் | விட்டோடிப்போம். |

(இ-து.) மானமுதலிய எல்லா நன்மைகளையும் கெடுத்தலினால் பசியினுங் கொடியது இல்லை.

எ-ய்—பத்தும்; ப-லை—போம். (உசு)

---

**ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு**
**அன்றி யதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை [ம்**
**நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்**
**எனையாளு மீசன் செயல்.**

| | |
|---|---|
| ஒன்றை நினைக்கில் | ஒருபொருளைப்பெற நினைத்தால் |
| அது ஒழிந்திட்டு | அப்பொருள் கிடையாமல் |
| ஒன்று ஆகும் | மற்றொருபொருள் கிடைக்கும் |
| அன்றி | அல்லாமல் |
| அது வரினும் வந்து எய்தும் | அப்பொருளே கிடைத்தாலும் வந்து கிடைக்கும் |

| | |
|---|---|
| ஒன்றை | ஒருபொருளை |
| நினையாதமுன் | நினையாதமுன்னே |
| வந்து நிற்பினும் நிற்கும் | வந்து நின்றாலும் நிற்கும் (இவை) |
| எனை ஆளும் | என்னை ஆளுகின்ற |
| ஈசன் செயல் | கடவுளது செயல்களாம். |

(இ-து.) வினைக்குத் தக்கபடி இன்ப துன்பங்களை யூட்டுகின்ற கடவுளது செயலினாலல்லாமல் சீவனது செயலால் நடப்ப தொன்றுமில்லை.

தோ-எ-ய்—இவை; ப-லை—ஈசன்செயல். ஒன்று—எண்ணுகுபெயர். உம்மைக ளிரண்டும் இறந்தது தழுவிய எச்சவும்மை. ஒழிந்திட்டு—செய்தென்னும் வாய்ப்பாட்டிறந்தகால வினையெச்சம்; ஒழி - பகுதி, இடு - விகுதி, து - சாரியை, த் - சந்தி, சந்தியால் வந்த தகரம் நகரமாதல் விகாரம், அனைத்தும் ஓர்பகுதி, உகரம் வினையெச்சவிகுதி, பகுதி டகர மிரட்டித்து இறந்தகாலங் காட்டிநின்றது. (உஎ)

---

உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம் [ கைந்த
எண்பது கோடிநினைந் தெண்ணுவன - கண்பு
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையுஞ் சஞ்சலமே தான்.

| | |
|---|---|
| கண் புதைந்த மாந்தர் | (அஞ்ஞானத்தால்) குருடாயிருக்கிற மனிதர்கள் |
| உண்பது நாழி | (ஒருநாளைக்கு) உண்ணும் உணவு ஒருபடியளவாம் |

| | |
|---|---|
| உடுப்பது நான்கு முழம் | உடுத்தும் சீலை நான்கு முழமாம் |
| நினைந்து எண்ணுவன | நினைத்தெண்ணும் காரியங்கள் |
| எண்பதுகோடி | எண்பதுகோடியாம் (ஆதலால்) |
| மண்ணின் கலம் போல | மண்ணாகிய பாத்திரம்போல |
| சாந்துணையும் | சாகுமளவும் |
| குடிவாழ்க்கை | (அவர்) குடிவாழ்க்கை யானது |
| சஞ்சலமே | துன்பமே யுடையது. |

(இ - து.) கிடைத்தமட்டில் திருத்தி யடையாதவர் களுக்கு இன்பமில்லை.

எ-ய்—குடிவாழ்க்கை ; ப-லை—சஞ்சலமே. உண்பது, உடுப்பது, இவ்விரண்டும் தொழிலாகுபெயர். எண்ணுவன - எதிர்கால வினையாலணையும் பெயர். மண்ணின் என்பதில் இன் சாரியை. ஏ - தேற்றம், உம்மை - முற்றும்மை. தான்-அசை. (௨௮)

---

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை-சுரந்தமுதம்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர்.

| | |
|---|---|
| மரம் பழுத்தால் | மரம் பழுத்திருந்தால் |
| வௌவாலை வா என்று கூவி | வா என்று வௌவாலைக் கூவி |
| இரந்து அழைப்பார் | வேண்டி அழைப்பவர் |
| யாவரும்அங்குஇல்லை | ஒருவரும் அம்மரத்தருகில் இலர் |
| கன்று ஆ | கன்றை யுடைய பசு |

| | |
|---|---|
| அமுதம் சுரந்து | பாலைச் சுரந்து |
| தரல் போல் | கொடுப்பதுபோல |
| கரவாது | ஒளிக்காமல் |
| அளிப்பரேல் | கொடுப்பாராஞல் |
| உலகத்தவர் | உலகத்துள்ளார் |
| உற்ருர் | உறவினராவர். |

(இ - து.) ஈகையுடையோருக்கு யாவரும் உறவினராவர்.

எ-ய்—அழைப்பார், உலகத்தவர்; ப-லை—இல்லை, உற்ருர். அங்கு—இடப்பொருள்தந்து ஏழாம் வேற்றுமைப் பொருளில்வரும் இடைச்சொல். இல்லை—எதிர்மறைக் குறிப்புப் பொதுவினைமுற்று. யாவரும் என்பதில் உம்மை முற்றுப் பொருளில் வந்தது. (உகூ)

---

தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே - வேந்தே
ஒறுத்தாரை யென்செயலா மூமொல்லா மொன்ரு
வெறுத்தாலும் போமோ விதி.

| | |
|---|---|
| வேந்தே | அரசனே! |
| பூ தாமரையோன் பொறிவழியே | அழகிய தாமரைப்பூவி லிருக்கின்ற பிரமனது எழுத்தின்படியே |
| முன் | முற்பிறப்பிலே |
| தாம்தாம்செய்தவினை | அவரவர்செய்த இருவினைகளை |
| தாமேஅனுபவிப்பார் | அவரவரே அனுபவிப்பார் |
| ஒறுத்தாரை | தீங்கு செய்தவரை |
| என் செயலாம் | என்ன செய்யலாம் |

| | |
|---|---|
| ஊர் எல்லாம் | ஊரிலுள்ளா ரெல்லாம் |
| ஒன்று | ஒன்றாய்க்கூடி |
| வெறுத்தாலும் | வெறுத்துக்கொண்டாலும் |
| விதி போமோ | விதியானது போகாது. |

(இ-து.) தமக்கு ஒருவன் தீங்குசெய்தால் தாம் முன் செய்த தீவினைப்பயன் இவன்வழியாக வந்ததென்று நினைத்து அமைந்திருத்தல் வேண்டும்.

எ - ய்—தாம், விதி; ப - லை — அநுபவிப்பார், போமோ; செ - ள்—வினை. தாம்தாம் என்னும் அடுக்குத் தனிமைப்பொருட்டு. ஏ - இரண்டில் முன்னது பிரிநிலை, பின்னது தேற்றம். பொறி—முதனிலைத் தொழிலாகு பெயர். ஊர்—இடவாகுபெயர். எல்லாம் என்பதின் ஈற்றில் முற்றும்மை விகாரத்தால் தொக்கது. வெறுத்தாலும் என்பதின் உம்மையும் - ஓ வும்—எதிர்மறை. (௩௦)

---

இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சால
ஒழுக்க முயர்குலத்தி னன்று-வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி.

| | |
|---|---|
| இழுக்கு உடைய பாட்டிற்கு | குற்ற முடைய பாட்டினும் |
| இசை சால நன்று | சொற்றொடர் மிகவும் நல்லது |
| ஒழுக்கம் | நன் னடக்கை |
| உயர்குலத்தின் நன்று | உயர்வாகிய குலத்தினும் நல்லது |
| வழுக்கு உடைய | (போரில்) தவறுத லுடைய |
| வீரத்தின் | வீரத்தினும் |

விடா நோய் நன்று { (மருந்து முதலியவற்றால்) தீராத நோய் நல்லது
பழிக்கு அஞ்சா நிந்தைக்குப் பயப்படாத
தாரத்தின் மனையாளினும்
தனி நன்று தனித்திருத்தல் நல்லது.

(இ - து.) இலக்கணக் குற்றமுடைய பாட்டும், ஒழுக்க மில்லா வுயர்குலமும், தவறுதலுடைய வீரமும், கற்பில் லாத மனைவியோடு கூடி வாழ்தலும் நன்றல்ல.

எ-ய்—இசை, ஒழுக்கம், விடாநோய், தனி; ப - லை— நன்று. குலத்தின், வீரத்தின், தாரத்தின் என்பவற்றின் இன்னுருபுகள்போலப் பாட்டிற்கு என்பதில் குவ்வுருபு எல்லைப்பொருளில் வந்தது. இசை என்னுஞ் சொல்லின் பெயர் அதனாலாகிய தொடருக்காதலால் கருவியாகு பெ யர். பழி—தொழிலாகுபெயர். பாட்டு—முதனிலைதிரிந்த தொழிலாகுபெயர். நன்று — குறிப்புவினைமுற்று; நல் - பகுதி, று - விகுதி, லகரத்திரிபு சந்தி. (௩க)

---

ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர் - சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து.

மா நிலத்தீர் { பெரிய பூமியி லுள்ளவர்களே
ஆம் செல்வம் { (உங்களிடத்தில்) உண்டாயிருக்கிற செல்வமானது
ஆறு இடும் ஆறு இடுகின்ற
மடுவும் மேடும்போல்-பள்ளமும் மேடும்போல

| | |
|---|---|
| மாறிடும் | மாறிப்போம் [கெடும்] |
| ஏறிடும் | உயரும் (ஆதலால்) |
| சோறு இடும் | (இரப்போர்க்கு) சோறிடுங்கள் |
| தண்ணீரும் வாரும் | தண்ணீரும் வாருங்கள் |
| தருமமே சார்வு ஆக | அத்தருமமே துணையாக |
| உள் நீர்மை | மனத்தின் தூய தன்மை |
| உயர்ந்து வீறும் | உயர்ந்து வளரும். |

(இ - து.) இரப்போர்க்கு ஈதலாகிய சற்கருமத்தாற் சித்த சுத்தி யுண்டாம்.

நீதா-எ-ய்—நீங்கள்; எ - ய்—நீர்மை; ப-லை—இடும், வாரும், வீறும்; செ-ள்—சோறு, தண்ணீர். மா — உரிச் சொல். ஆம் செல்வம்—பெயரெச்சத் தொகாநிலைத்தொடர். மேடும் மடுவும் என்பவற்றில் உம்மை எண்ணும்மை. நீரும் என்பதி லும்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. ஏ - தேற்றம். (௩௨)

---

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில், பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது நெட்டிருப்புப், பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின், வேருக்கு நெக்கு விடும்.

| | |
|---|---|
| வேழத்தில் | யானையின்மேல் |
| பட்டு உருவும் | தைத்து உருவுகின்ற |
| கோல் | அம்பானது [ல) |
| பஞ்சில் பாயாது | பஞ்சின்மேல் தைக்காது (அதுபோ |
| வெட்டனவை / மெத்தனவை / வெல்லா | வலியவைகள் மெலியவைகளை வெல்லமாட்டா |

| | |
|---|---|
| நெடு | நீண்ட |
| இருப்புப்பாறைக்கு | இரும்பாற்செய்த பாரைக்கு |
| நெக்குவிடா பாறை | பிளவாத கருங்கற்பாறையானது |
| பசு மரத்தின் வேருக்கு | பச்சை மரத்தினது வேருக்கு |
| நெக்கு விடும் | பிளந்து போம் |

(இ-து.) வலியோரும் காலவசத்தால் மெலியோரால் தோல்வி யடைவர்.

எ-ய்—வெட்டனவை, பாறை; ப-லை—வெல்லா, நெக்குவிடும்; செ-ள்—மெத்தனவை. வெட்டனவை, மெத்தனவை,—வினையா லணையும்பெயர்கள். வெல்லா—அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப்பன்மை எதிர்மறைவினைமுற்று. இருப்புப்பாரை—முதற் கருவிப்பொருளில்வந்த மூன்றும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்மொழி. குவ்வுருபு இரண்டும் பகைப்பொருள். (௩௩)

---

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின், எல்லாருஞ் சென்றங் கெதிர் கொள்வர்-இல்லானை, இல்லாளும் வேண்டாண் மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள், செல்லா தவன்வாயிற் சொல்.

| | |
|---|---|
| கல்லானே ஆனாலும் | படியாதவனே ஆயினும் |
| கைப்பொருளொன்று | கையிலே பொருள்மாத்திரம் |
| உண்டாயின் | உண்டாயிருந்தால் |
| எல்லாரும் சென்று | யாவரும் போய் |

| | |
|---|---|
| எதிர்கொள்வர் | எதிர்கொள்வார்கள் |
| இல்லானை | (பொருள்) இல்லாதவனை |
| இல்லாளும் வேண்டாள் | மனைவியும் விரும்பாள் |
| ஈன்று எடுத்த | பெற்றெடுத்த |
| தாய் வேண்டாள் | தாயும் வெறுப்பாள் |
| அவன் வாயில் சொல் | அவன்வாயிற் (பிறக்கும்) சொல் |
| செல்லாது | பயன்படாது. |

(இ-து.) பொருளில்லானை யாவரும் ஒருபொருளாக மதியார்.

எ-ய்—எல்லாரும், இல்லாள், தாய், சொல்; ப-லை—எதிர்கொள்வர், வேண்டாள், செல்லாது; செ-ள்—இல்லானை. ஏ-தேற்றம். உம்மை மூன்றில் முன்னது உயர்வு சிறப்பு, நடுநின்றது முற்று, பின்னது இழிவு சிறப்பு. தாய் என்பதின் ஈற்றில் இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. ஒன்று என்பது சிறுமைப்பொருட்டு. அங்கு, மற்று - அசை. (௩௪)

---

பூவாதே காய்க்கு மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரோ - தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு.

| | |
|---|---|
| பூவாதே காய்க்கும் | பூவாமலே காய்க்கின்ற |
| மரமும் உள | மரங்களும் உண்டு (அதுபோல) |
| ஏவாதே நின்று | ஏவாமலே யிருந்து |

| | |
|---|---|
| உணர்வார் உளர் | அறிய வல்லவர்களும் உண்டு |
| தூவா விளைத்தாலும்-தூவி விளைத்தாலும் | |
| நன்று ஆகா | நன்றாக விளையாத |
| வித்து எனவே | விதை போலவே |
| பேதைக்கு | அறிவிலானுக்கு |
| உரைத்தாலும் | எடுத்துச் சொன்னாலும் |
| உணர்வு தோன்றாது | அறிவு உண்டாகாது. |

(இ-து) குறிப்பறிந்து நடப்பவரே அறிவுடையோர்.

எ-ய்—உணர்வார், உணர்வு; ப-லை—உளர், தோன்றாது. பூவாதே, ஏவாதே,— இவ் ஏகாரம் பிரிநிலை. உளரோ என்பதில் ஏ அசை; எனவே என்பதில் ஏ தேற்றம். மரமும் என்பதில் உம்மை இறந்தது தழீஇயதனோடு உயர்வுசிறப்பு. மக்களுளும்—இவ்வும்மை உயர்வுசிறப்பு. விளைத்தாலும், உரைத்தாலும், என்பவற்றில் உம்மை இழிவுசிறப்பு. உணர்வார் என்பதில் இறந்தது தழீஇயதனோடு உவர்வு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. பேதை—குணவாகுபெயர். தாம்-அசை. (௩௫)

---

நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்தில், கொண்ட கருவழிக்குங் கொள்கைபோல்-ஒண்டொடி, போதந் தனங்கல்வி பொன்றவரும் காலமயல், மாதர்மேல் வைப்பார் மனம்.

| | |
|---|---|
| ஒள் தொடி | ஒளிபொருந்திய வளையலை அணிந்தவளே |

| | |
|---|---|
| நண்டும் | நண்டும் |
| சிப்பி | இப்பியும் |
| வேய் | மூங்கிலும் |
| கதலி | வாழையும் |
| நாசம் உறும் காலத்தில் | அழிவை அடையுங் காலத்தில் |
| கொண்ட கரு | தாம் பெற்ற கருப்பமே |
| அழிக்கும் கொள்கைபோல் | அழிக்கின்ற தன்மையைப்போல |
| போதம் | ஞானமும் |
| தனம் | திரவியமும் |
| கல்வி | வித்தையும் |
| பொன்றவருங்காலம் | அழியவருகிற காலத்தில் |
| மனம் | கருத்தை |
| அயல் மாதர்மேல் வைப்பார் | பிறா மனைவியாமேலே வைப்பார்கள். |

(இ-து) பிறர்மனை நயத்தலால் ஞான முதலிய யாவும் நாசமாகும்.

தோ - எ-ய்—புருடர்; ப - லை—வைப்பார்; செ-ள்—மனம். நண்டு சிப்பி வேய் கதலி, போதம் தனம் கல்வி, என்பன உம்மைத் தொகைநிலைத் தொடர்கள். போல்—வினையெச்சவிகுதி அகரம் தொகுத்தல். கரு என்பதின் ஈற்றில் தேற்ற ஏகாரம் விகாரத்தால் தொக்கது. (௩௯)

விணைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்து மில்லை- நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலைபடே னெஞ்சேமெ
விண்ணுறுவார்க் கில்லை விதி. [ய்

| | |
|---|---|
| விணை பயன் | இருவினைப் பயன்களை |
| வெல்வதற்கு | வெல்லுவதற்கு |
| வேதம் முதல் ஆம் | சுருதி முதலாகிய |
| அனைத்து ஆயநூல் அகத்தும் | எல்லா நூல்களிடத்தும் |
| நினைப்பு அது என | எண்ணமே அவ்விணைப்பயனென்று |
| கண்ணுறுவது அல்லால் | அறிவதே அல்லாமல் |
| இல்லை | (வேறே) இல்லை |
| நெஞ்சே | மனமே |
| கவலைபடேல் | வியாகுலப்படாதே |
| மெய் விண் உறுவார்க்கு | உண்மையாகிய முத்தி உலகத்தை அடைய விரும்புவோர்க்கு |
| விதி இல்லை | யாதொருகருமமும் இல்லையாம். |

(இ-து.) யாதொரு முயற்சியுமின்றி வீடொன்றையே விரும்பி யிருப்போர்க்கு இன்ப துன்பங்க ளில்லை.

தோ - எ - ய்—வேறு ; எ-ய்—விதி ; ப - லை—இல்லை. விணைப்பயன்—பண்புத்தற்கிழமைப் பொருளில் வந்த் ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். வெல்வது-

தொழிற்பெயர்; வெல்-பகுதி, வ்-எதிர்கால இடைநிலை, அ-சாரியை, து - புடைபெயர்ச்சியை உணர்த்தும்விகுதி. குவ்வுருபு இரண்டும் தகுதிப்பொருள. கவலைபடேல்— ஏவலொருமை எதிர்மறைவினைமுற்று. உறுவார்—எதிர் கால வினையாலணையும்பெயர். இல்லை இரண்டும் எதிர் மறைக்குறிப்புப் பொதுவினைமுற்று. (௩எ)

---

நன்றென்றுந் தீதென்று நானென்றுந் தானெ ன்றும், அன்றென்று மாமென்று மாகாதே-நின் றநிலை, தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப், போனவா தேடும் பொருள்.

| | |
|---|---|
| நன்று என்றும் | (இது) நல்லது என்றும் |
| தீது என்றும் | கெட்டதென்றும் |
| நான் என்றும் | நானென்றும் |
| தான் என்றும் | அவனென்றும் |
| அன்று என்றும் | அல்லதென்றும் |
| ஆம் என்றும் | ஆகுமென்றும் |
| நின்ற நிலை | (பதியில் இரண்டறக்கூடி) நின்ற நிலை |
| தான் | (ஆன்மாவாகிய) தான் |
| அது ஆம் | அப்பதி யாகின்ற |
| தத்துவம் ஆம் | உண்மைநிலையாம் (அது) |
| சம்பு அறுத்தார் | சம்பை அறுத்தவர் |
| யாக்கைக்கு | கூட்டுதற்காக |

தேடும் பொருள் — தேடுகிற பொருளானது
போன ஆ — (வேறின்றி) போனவாறுபோலும்.

(இ-து.) பாசத்தால் ஆன்மா பதியின் வேருகத் தோன்றினும், தற்போத ஒழிவில் அப்பதியாய் நிற்கும் நிலையே தான் அதுவாகும் உண்மைநிலை.

எ-ய்—நிலை; தோ-எ-ய்—அது; ப-லை—தத்துவமாம், போலும். உம்மைகள் எண்ணுப்பொருள. ஆகாது—எதிர்மறை வினையெச்சம். நிலை யாக்கை இரண்டும் தொழிற்பெயர். கு-தகுதிப்பொருட்டு. போலும் என்னும் பயனிலை எஞ்சி நின்றது. (௩அ)

---

முப்பதா மாண்டளவின் மூன்றற் றொருபொரு
தப்பாமற்றன்னுட் பெறுனயின்-செப்பும் [ளைத்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமா மூப்பு.

முப்பது ஆம் ஆண்டு அளவில் — முப்பது வயதளவாகிய இளமைப் பருவத்தில்
மூன்று அற்று — ஆணவம் மாயை கன்மம் (ஆகிய) மும்மலமும் நீங்கி
ஒரு பொருளை — ஒப்பற்ற முதற்கடவுளை
தப்பாமல் — தவருமல்
தன் உள்பெறுன் ஆயின் — தன்னுள்ளே (அநுபூதி ஞானத்தால் ஒருவன்) அடையான் ஆயின்
காரிகையார்தங்கள் — அழகியமாதாது

| | |
|---|---|
| அளவே | (தளர்ச்சி) அளவாகவே |
| மூலை ஆகும் | தனமுண்டாம் (அதுபோல) |
| மூப்பு | பின்வரும் முதுமைப்பருவத்தில் |
| செப்பும் கலை அளவே ஆகும் | (அம்முதற்பொருள் அவனுக்கு) கற்றசாத்திர ஞானத்தினளவேயாம். |

(இ-து.) முப்பது வயதிலேயே பற்றற்று ஞானாசாரியனை அடுத்துக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடல் ஆகிய இந்நான்கும் செயல்வேண்டும்.

தோ-எ-ய்—அம்முதற்பொருள்; ப-லை—ஆகும். ஆம் - செய்யும் என்னும் வாய்பாட்டு எதிர்காலப்பெயரெச்சம். ஈற்றுயிர்மெய் கெட்டது. மூன்று—எண்ணுக்குபெயர். ஏ- இரண்டும் தேற்றம். ஆம் மூன்றும் அசைகள். (௩௧)

---

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியும்-கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

| | |
|---|---|
| தேவர் குறளும் | திருவள்ளுவநாயனார் திருக்குறளும் |
| திரு நான்மறை முடிவும் | சிறந்த நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும் |
| மூவர் தமிழும் | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய மூவருடைய தமிழ்ப்பதிகங்களும் |

| | |
|---|---|
| முனிமொழியும் | வியாச முனிவருடைய வேதாந்த சூத்திரமும் |
| கோவை | (திருவாதவூரடிகளுடைய) திருக்கோவையாரும் |
| திருவாசகமும் | திருவாசகமும் |
| திருமூலர் சொல்லும் | திருமூலநாயனார் திருமந்திரமும் |
| ஒருவாசகம் என்று உணர் | ஒருபொருளைக்குறித்த வாக்கியங்களென்று (நீ) அறி. |

(இ-ள்.) திருக்குறள் முதலிய நூல்களெல்லாம் வேறு வேறு வாக்கியங்களாகத் தோன்றினும் கடவுளியல்பும், உயிரியல்பும், பந்தவியல்பும், முத்தியியல்பும் ஆகிய இவைகளை ஒருதன்மையாகவே யுணர்த்தும்.

தோ-எ-ய்—நீ; ப-லை—உணர். உம்மைகள் எண்ணுப் பொருள. சொல்—கருவி ஆகுபெயர். உணர்—விகுதி புணர்ந்து குன்றிய ஏவலொருமை வினைமுற்று. (௪0)

நல்வழிப்பதவுரை

முற்றிற்று.

---

மஹாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை. 20.